**செ. கு. எண்: 094** **நாள்: 17.06.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 17.6.2018

நாகப்பட்டினம் மாவட்டம், குற்றாலம் வட்டம் மற்றும் நகரத்தைச் சேர்ந்த திரு. ராமமூர்த்தி என்பவரது வீட்டிற்கு, விருந்தினர்களாக வந்திருந்த தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் ஆணைக்காரன்பாளையத்தைச் சேர்ந்த திரு. சுதாகர் என்பவரின் மகள் செல்வி வர்ஷினி மற்றும் திரு. தேவேந்திரன் என்பவரின் மகள் செல்வி சியாமளா ஆகியோர் இன்று (17.6.2018) கொம்புகாரன் குட்டையில், மண் தோண்டி விளையாடிக் கொண்டிருந்த போது, திடீரென மண் சரிந்து விழுந்ததில், மூச்சுத் திணறல் ஏற்பட்டு, மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த செல்வி வர்ஷினி மற்றும் செல்வி சியாமளா ஆகிய இரண்டு குழந்தைகளின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மண் சரிந்து விழுந்து உயிரிழந்த செல்வி வர்ஷினி மற்றும் செல்வி சியாமளா ஆகிய இரண்டு குழந்தைகளின் குடும்பதினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**